

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், சின்னத்திரை நடிகர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தலைவர் பரத், பொதுச் செயலாளர் வி. ரவீந்தர், பொருளாளர் திருமதி சி. கற்பகவள்ளி, துணைத் தலைவர்கள் ராஜ்காந்த், ஆதித்யா (எ) என்.எஸ். செல்வம், இணைச் செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி 1இல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### ரூ. 173.86 கோடி செலவில்

# 19 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஆக.26-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.08.2025) தலைமைச் செயலகத்தில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 173.86 கோடி ரூபாய் செலவில், 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், பெரும்பாக்கம், ஒட்டன்சத்திரம் மற்றும் கடலாடி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள், சென்னையில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் ஆணையரகம், திருப்பூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகக் கட்டடம் மற்றும் வால்பாறையில் கட்டப்பட்டுள்ள சிங்காரவேலர் ஓய்வு இல்லம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.**

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் அளப்பரிய பங்காற்றி வரும் தமிழ்நாட்டில், நவீன தொழில்நுட்ப திறன் தேவைகளைக் கருத்திற் கொண்டு, தொழிற்சாலைகளுக்கேற்ற திறமையான மனித வளத்தை உருவாக்குவதற்காக ரூ.2877 கோடி செலவில் 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழில்நுட்ப மையங்களாக மேம்படுத்தப்பட்டு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டன. இதன் முத்தாய்ப்பாக, தொடங்கப்பட்ட முதல் ஆண்டிலேயே, தொழில் 4.0 தொழிற்பிரிவுகளில் பயின்றவர்கள் உட்பட 29 மாணவர்கள் 2024ஆம் ஆண்டில் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று நமது மாநிலத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் ஆங்கில மொழியில் பேசும் திறன் மற்றும் மென்திறன் வளர்ப்புப் பயிற்சியும், தொழிற்நுட்ப மையங்கள் வழியாக மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களில் குறுகிய கால பயிற்சிகளும் வழங்கப்பட்டதன் பலனாக மாணவர்களின் திறன் மேம்படுத்தப்பட்டு நடப்பாண்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான மாணவர்கள், பல முன்னணி நிறுவனங்களில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

திறன் பெற்ற தொழிலாளர்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, "எல்லார்க்கும் எல்லாம்" என்ற கொள்கையின் அடிப்படையில் பின் தங்கிய பகுதிகளில் உள்ள மாணவர்களும் பயன்பெறும் வகையில், ஒரே நாளில் வரலாற்று சாதனையாக, 128 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில், செஞ்சி, மரக்காணம், திசையன்விளை, ஏம்பல், சாலவாக்கம், செம்பனார்கோவில், தா.பழூர், திருஉத்திரகோசமங்கை, மணப்பாறை, காங்கேயம், குருக்கள்பட்டி, திருச்செங்கோடு, கிருஷ்ணகிரி, திருவள்ளூர், காஞ்சிபுரம், திருப்பரங்குன்றம், மண்ணச்சநல்லூர், பேரூர் மற்றும் காரிமங்கலம் ஆகிய 19 இடங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பெரும்பாக்கம், ஒட்டன்சத்திரம் மற்றும் கடலாடி ஆகிய இடங்களில் 17 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

தொழிலாளர் துறையின் வாயிலாக, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் அமலாக்கப்படுவதோடு, சமரசப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கான பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு ஆண்டுகளில், 31.39 இலட்சம் பதிவு பெற்ற அமைப்புசாரா மற்றும் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு, கல்வி, திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், முடக்க ஓய்வூதியம் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் ரூ.2811.52 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டு, தொழிலாளர் நலனுக்காக தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, தொழிலாளர் துறை சார்பில் 27 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை அண்ணா நகரில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் ஆணையரக அலுவலகக் கட்டடம், திருப்பூர் மாவட்டம், தொட்டிப்பாளையத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த தொழிலாளர் துறை அலுவலகக் கட்டடம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் கட்டப்பட்டுள்ள சிங்காரவேலர் ஓய்வு இல்லம் ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் கொ. வீர ராகவ ராவ், தொழிலாளர் துறை ஆணையர் சி.அ.ராமன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன், பவர் கிரிட் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திருச்சிற்றம்பலம் கிருஷ்ணகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 28–ஆம் தேதி மாலை வர்த்தகக் கண்காட்சியை துவக்கி வைக்க வருகை தரும்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஆக.26-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

தென்னிந்தியாவின் முதன்மையான உள்கட்டமைப்பு கட்டுமான இயந்திர வர்த்தக கண்காட்சி துவக்க விழா மற்றும் தமிழ்நாடு நெஞ்சாலைத் துறை ஒப்பந்ததாரர்கள் கூட்டமைப்பின் 2 - வது மாநில மாநாடு ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் உள்ள கூட்ட அரங்கில் நாளை மறுநாள் 28-ஆம் தேதி மாலை 5.00 மணி அளவில் விழா நடைபெறவுள்ளது.



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இக்கண்காட்சியை துவக்கி வைத்து மாநாட்டை மலரை வெளியீட்டு பேருரையாற்றுகிறார். முதல் நூலை பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பெற்றுக்கொள்கிறார்.

இத்துவக்க விழாவிற்கு வருகைத் தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் கண்டோன்மெண்ட் அண்ணா சிலை அருகில் நாளை மறுநாள் ஆகஸ்ட் 28-ஆம் தேதி மாலை 4.30 மணியளவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இவ்விழாவிற்கு வருகை தரும், நம்முடைய உயிரனைய தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் கண்டோன்மெண்ட் பட்ரோடு, அண்ணா சாலை அருகில் மேள, தாளம், பேண்டு வாத்தியம் முழங்க பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வரவேற்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாவட்ட - மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் - கழக நிர்வாகிகள் - தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பல்லாயிரக்கணக்கில் அணி திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கையில் கூறியுள்ளார்.




நாள் : 26.08.2025
செவ்வாய்கிழமை, காலை 8.00 மணி
இடம் : புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளி, சென்னை, மயிலாப்பூர்.




தாயைப் போல வந்தாயே பசியாற்ற...

பிள்ளைகள் பசி தீர்க்கும் காலை உணவு திட்டத்தின்
விரிவாக்க நிகழ்விற்கு வருகை தரும்
மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களை வருக! வருக! என வரவேற்கும்
பி.கே.சேகர்பாபு
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்
தலைவர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்

அன்புடன் : பிரியா ராஜன்
பெருநகர சென்னை மாநகர மேயர் – தலைமை செயற்குழு உறுப்பினர்